Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | இளவரசி | Calling: | இல்லதரசி |
| Father's / Husband's Name: | சேகர் | Religion: | |
| Village: | சான்றோர்குப்பம் | Age: | 54 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

நான் சான்றோர்குப்பத்தில் வசித்து இல்லதரசியாக வாழ்ந்து வருகிறேன். கடந்த 15.12.2023ம் தேதி மாலை 06.30 மணிக்கு வாணியம்பாடி தாண்டி நெற்குந்தி அருகே கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் என் கணவர் கே.ஜி.சேகர் நடந்து சென்றபோது கிருஷ்ணகிரியிலிருந்து வந்த கார் என் கணவர் ரோட்டை தாண்டி செல்லும்போது என் கணவரின் மீது இடித்து விட்டு சென்றுவிட்டது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில்சேர்த்திருப்பதாக சம்பவ இடத்திற்கு எதிரே மெக்கானிக் கடை வைத்திருந்த கிங்ஸ்லி என்பவர் எனக்கு தகவல் சொன்னார். தகவல் தெரிந்து என் கணவரை வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். நான் பார்க்கும்போது என் கணவருக்கு 2 கால்களும் அடிப்பட்டிருந்தது. அவரது கால் உள்ளே 8 துண்டாக அடிப்பட்டிருந்தது. முகவாய் கட்டையிலும் அடிப்பட்டிருந்தது. மறுநாள்

போலிசார் மருத்துவமனைக்கு வந்தார்கள். போலிசார் வந்தபோது எனது கணவர் மயக்க நிலையில் இருந்ததால் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், **புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் முடிக்கப்பட்டது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) இளவரசி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சேகர் | Calling: | ஓய்வு |
| Father's / Husband's Name: | கோபால் | Religion: | |
| Village: | சான்றோர்குப்பம் | Age: | 58 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

நான் சான்றோர்குப்பத்தில் வசித்து வருகிறேன். விபத்திற்கு முன்பு கீரை வியாபாரம் செய்து வந்தேன். விபத்து ஏற்பட்ட பின் நான் வியாபாரம் செய்ய போவதில்லை. தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 2023ம் வருடத்தில் 15ம் தேதி என்று நினைக்கிறேன், மாலை நேரத்தில் வாணியம்பாடி டோல்கேட் அருகே நான் ரோட்டை தாண்டி நடந்து சென்றபோது எங்கிருந்தோ வந்த ஒரு கார் என் மீது மோதியது. அதன்பின்னிட்டு என்ன நிகழ்ந்தது என்று எனக்கு தெரியாது. நான் கண்விழித்து பார்த்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். எனது இருகால்களும் பலத்த அடிப்பட்டிருந்தது. எனது கால்கள் 6,7 துண்டுகளாக காயம்பட்டிருந்தது. அங்கிருந்து என்னை மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தார்கள். நான் சென்னை ராமச்சந்திரா

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதன்பிறகு போலிசார் 05ம் தேதி, 2வது மாதத்தில் என்னை வீட்டில் வந்து விசாரித்தார்கள். (சாட்சி அவரது காலில் 5 இடங்களில் ராடு வைத்திருப்பதால் நீண்ட நேரம் சாட்சி சொல்ல முடியாது என்று கூறியதால் அவரை உட்கார வைத்து சாட்சி சொல்ல அனுமதிக்கப்பட்டது.)

எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் முடிக்கப்பட்டது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சேகர்

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | கிங்ஸ்லி | Calling: | கார் ஒர்க்ஷாப் |
| Father's / Husband's Name: | ஜேசுபாதம் | Religion: | |
| Village: | டிகஸ்பா | Age: | 43 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 3 முதன்மை விசாரணை

நான் ஆம்பூர் டிகஸ்பாவில் வசித்து சான்றோர்குப்பத்தில் கார் ஒர்க்ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். கடந்த 15.12.2023ம் தேதி மாலை 06.30 மணியளவில் வாணியம்பாடி டோல்பிளாசா பக்கத்தில் உள்ள மாருதி கார் ஷோரூம் எதிரில் ஒரு பெரியவர் ரோட்டை கடந்து வரும்போது கிருஷ்ணகிரியிலிருந்து சென்னை நோக்கி வந்த Anthra Pradesh Innova கார் ஒன்று Over Speedஆகவும், Rash Drivingஆகவும் வந்து பெரியவர் மீது மோதியது. மோதியதில் பெரியவர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். அதில் அவர் கால்கள் இரண்டும் உடைந்தது. மேற்படி காரை ஓட்டி வந்த நபரின் பெயர் தெரியவில்லை. அவருக்கு லேசாக சொட்டை தலையாக இருந்தது. அவர் ஆந்திராவை சேர்ந்தவர். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். பின் பெரியவரை அருகிலிருந்த நபர்களின் உதவியுடன் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று

சேர்த்தேன். பெரியவரின் குடும்பத்திற்கு தகவல்சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் முடிக்கப்பட்டது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கிங்ஸ்லி

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name: | அருள்தாஸ் | Calling: | விவசாயம் |
| Father's / Husband's Name: | பாலகிருஷ்ணன் | Religion: | |
| Village: | சான்றோர்குப்பம் | Age: | 57 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 4 முதன்மை விசாரணை

நான் சான்றோர்குப்பத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 ஆகியோரை தெரியும். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு 15ம் தேதி 2வது மாதத்தில் மாலை நேரத்தில் வாணியம்பாடி நெற்குந்தி அருகே அ.சா.2 சேகர் நடந்து ரோட்டைதாண்டும்போது கார் மோதி விபத்து ஏற்பட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் கேள்விப்பட்டேன். தகவல் தெரிந்து வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். சேகருக்கு இரு கால்கள் மற்றும் முகத்தாடையில் அடிப்பட்டிருந்தது. அவரைமேல்சிகிச்சைக்காக முதலில் கிருஷ்ணா மருத்துவமனைக்கும் பின் சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கும் அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் முடிக்கப்பட்டது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அருள்தாஸ்

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 453 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name: | ரமேஸ்பாபு | Calling: | கம்பெனி வேலை |
| Father's / Husband's Name: | கோவிந்தன் | Religion: | |
| Village: | சான்றோர்குப்பம் | Age: | 56 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 5 முதன்மை விசாரணை

நான் சான்றோர்குப்பத்தில் வசித்து கம்பெனி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 ஆகியோரை தெரியும். 15.12.2023ம் தேதி மாலை 07.00 மணியளவில் அ.சா.1 இளவரசி எனக்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு அ.சா.2 சேகர் வாணியம்பாடி நெற்குந்தி டோல்கேட் அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கி மெக்கானிக்கை பார்க்க நடந்து சென்றபோது ஆந்திரா இன்னோவா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். சேகருக்கு வலது காலின் 3 பகுதிகளில் பலத்த அடிப்பட்டு மிகுந்த ரத்த சேதம் ஏற்பட்டிருந்தது. இடது காலில் 3 இடங்களில் அடிப்பட்டிருந்தது. முகத்தாடையில் அடிப்பட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார். மருத்துவர் மேல்சிகிச்சைக்காக அடுக்கம்பாறைக்கு பரிந்துரை செய்தார். அவரை மேல்சிகிச்சைக்காக முதலில் ஆம்பூர் கிருஷ்ணா மருத்துவமனைக்கும், பின்

போரூர் ராமச்சந்திரா மருத்துவமனைக்கும் அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் முடிக்கப்பட்டது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ரமேஸ்பாபு